**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 07.05.2025**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 30°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 11°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் குறிப்பான 5ம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் கோடை மழை பெறப்பட்டது.

**1. மேற்குமண்டலம்**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 25°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40-50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 12-16 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழையுடன் மணிக்கு 08-20 கிமீ வேகத்தில் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குமலையடிவாரங்களில் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. இடியுடன் கூடிய மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ மேல் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பயிர்களில் பயிர்கழிவு மூடாக்கு இடுவதனால் ஈரத்தினை ஆவியாகாமல் சேமிக்கலாம்.
- மழை எதிர்பார்க்கப்படுதால், உழுத நிலங்களில் இறவை சோளம் விதைக்க ஏற்ற பருவமாகும். மழையினைப் பொறுத்து நீர் பாசனம் செய்யவும்.
- கம்பு பயிர் செய்வதற்கு இது உகந்த பருவம். ஆதலால் விவசாயிகள் கம்பு பயிரை இறவை பயிராக விதைப்பு செய்து மழையினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும்.
- இடியுடன் கூடிய மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள கரும்பிற்கு தோகை உரித்து விட்டம் கொடுக்கவும்.
- தற்போதைய வானிலையில் காய்கறி பயிர்களில் சிலந்தி பூச்சித் தாக்குதல் வர வாய்ப்புள்ளது. மழை எதிர்பார்க்கப்படுவதால் மழை இல்லாத வேளையில் மருந்து தெளிக்கவும்.

- இடியுடன் கூடிய மழையும் சுழற்காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டுக் கொடுக்கவும்.
- அனைத்து மரப்பயிர்களுக்கும் தூரிலிருந்து 1.5 மீட்டர் தூரத்தில் உள்நோக்கிய வட்டப்பாத்தி அமைத்து கோடை மழையினை வேர்பகுதியில் சேமிக்கவும்.
- இடியுடன் மழையும் எதிர்பார்க்கப்படுவதால் கால்நடைகளை காலை 11.00 முதல் மாலை 4.00 மணி வரையிலும் மற்றும் மேற்கு மலை அடிவாரப்பகுதிகளுக்கும் மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டாம்.

## 2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த ஐந்து தினங்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 35 - 37°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 - 31°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 14 - 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரை

- நெல்லில் கோடை பருவத்திற்கு நாற்றாங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றாங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றாங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும்.
- நெல் நடவு வயலில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக தழை, மணி, சாம்பல் சத்துடன் 10 கிலோ ஜிங்சல்பேட்டும், 200 கிலோ ஜிப்சமும் இடவேண்டும்.
- வாழை மரங்கள் காற்றினால் சாயாமல் இருக்க வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும்.
- கால்நடைகளுக்கு காற்றின் வெப்பநிலை 35 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகரிக்கும் போது கறைவை மாடுகளின் தண்ணீர் குடிக்கும் அளவு அதிகமாவதோடு உலர் பொருள் உட்கொள்ளும் அளவு குறையும். இதனால் பால் உற்பத்தி குறைய தொடங்கும். எனவே பசுந்தீவனத்துடன் புரதசத்துள்ள பசுந்தீவனங்களை கொடுக்க வேண்டும்.
- 3 மாத வயதுடைய கன்று குட்டிகள் மற்றும் 2 மாத வயதுடைய ஆட்டு குட்டிகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போடவும்.

## 3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34-36°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-29°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

24 மணி நேர காற்றின் வேகம் மணிக்கு 12-18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்றும் காற்று பெரும்பாலும் மேற்கு-தென்மேற்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- நெல் நாற்றங்கால் அமைக்க அதிக ஈரப்பதம் குலை நோய் அதிகரிக்க வாய்ப்பு, எனவே நிலத்திரல் நீர் போதுமான அளவு பார்த்துக்கொள்ளவும். சூடோமோனாஸ் ஃப்ளோரசென்ஸ் தேக்கிய நீரில் தெளித்து நாற்றங்காலை 30 நிமிடம் ஊரவைத்து பின் நடவு செய்யவும்.
- மானாவாரி மற்றும் பாசனப்பயிர்களில் முந்யை வாரத்தில் மழைப்பொழிவு இல்லாத இடங்களில், வெப்பநிலையினால் பூச்சி தாக்குதல் அதிகரிக்க கூடும். இதனால் விளைச்சல் பாதிக்க கூடும். எனவே விவசாயிகள் உள்ளூர் வானிலைக்கு ஏற்ப மழை இல்லையெனில் மருந்து தெளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- பருத்தியில் லேசான மழையை பயன்படுத்தி உரமிடவும் மற்றும் மண் அனைத்து செடிகளுக்கு நன்கு வளர இடை உழவு பணி மேற்கெள் விவசாயிகளை கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- மாவில் அதிக காற்றின் ஈரப்பதம் மற்றும் பகல்நேர வெப்பநிலை நிலவுவதால் வானிலை ஆகியவை ஆந்த்ராக்னோஸ் நோய்த்தொற்றுக்கு சாதகமாக உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த, அறிகுறிகள் கடுமையாக இருந்தால் 1. கார்பன்டாசிம் + மான்கோசெப் (0.25%) கலந்து 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. 2. இந்த பூஞ்சை வயலில் இருந்து சேமிக்கும் இடத்திற்கு பரவுகிறது. எனவே வயல் துப்புரவு நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். 3. சேமிப்பதற்கு முன் நீர் நேர்த்தி (50-55° செல்சியஸ்) 15 நிமிடங்கள் (அல்லது) மாம்பழங்களை பெனோர்னைல் கரைசலில் (500 பிபிஎம்) 5 நிமிடங்கள் நனைக்க வேண்டும்.
- தென்னையில் தற்போது நிலவும் வானிலை ரூகோஸ் வெள்ளை ஈ க்களுக்கு சாதகமாக உள்ளது. கட்டுப்படுத்த குறைவான மழைப்பொழிவு போதுமானதாக இல்லை. எனவே, என்கார்சியா ஒட்டுண்ணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒரு லிட்டர் தண்ணீரில் 25 கிராம் மைதா கரைசல் தெளிப்பாக தெளிக்கவும், மஞ்சள் குச்சி பொறியையும் வைக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- வாழையில் நீர் தேங்காமல் இருப்பதற்கு வடிகால் வாய்க்கால்களை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- நிலக்கடலையில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதால் விவசாயிகள் செடிக்கு மண் அணைக்கவும், காய்சொறி மற்றும் நூற்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த எக்டருக்கு 400 கிலோ ஜிப்சத்தை செடிகளுக்கு அருகில் இடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- மாட்டிற்கு கோடைகால மேலாண்மை-1. வெயில் நேரங்களில் மேய்ச்சலை தவிர்க்க வேண்டும். அதற்கு பதிலாக மாடுகளை காலை 6-10 மணி மற்றும் மாலை 4-6 மணி ஆகிய நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவும். 2. ஈராமான சாக்குகளை கொட்டகையின் கூரையில் விரித்து, கொட்டகைக்குளட விசிறியுடன் கூடிய தண்ணீர் தெளிப்பான்கள் அமைக்கலாம். 3 கால்நடைகளை ஒரு நாளைக்கு காலை, மாலை 2 முறை கழுவ வேண்டும். 4. 30 கிராம் தாது உப்புக்கலவையை கோடைக்காலத்தில் சேர்க்க வேண்டும்.

- *வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடு கோடைகால மேலாண்மை-1. வெயில் நேரங்களில் மேய்ச்சலை தவிர்க்க வேண்டும். அதற்கு பதிலாக மாடுகளை காலை 6-10 மணி மற்றும் மாலை 4-6 மணி ஆகிய நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவும். 2. ஆடுகளின் கொட்டகை நல்ல காற்றோட்டமாக இருக்க வேண்டும். நெரிசல் இல்லாமல் இருக்க வேண்டும். 3. போதுமான அளவு குடிநீர் கொடுக்க வேண்டும். 4. குளிர்ந்த நேரத்தில் தீவனம் அளிக்க வேண்டும். 5. உலர்ந்த வைக்கோலை மேற்கூரையில் பரப்பி குறிப்பிட்ட கால இடைவெளியில் தண்ணீர்தெளிப்பதால் கொட்டகையின் உட்புறம் வெப்பம் குறையும்.*

**தெற்கு மண்டலம் -2**

*வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தின் அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை 34-39°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25-28°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 06-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

**வேளாண் அறிவுரை**

**நெல்**

நெற்பயிரில் பச்சை தத்துப்பூச்சியின் தாக்குதல் தென்படுகின்றது. இவற்றின் தாக்குதலால் இலைகள் நுனி முதல் அடிப்பகுதி வரை முழுவதும் மஞ்சள் நிறமாக மாறி விடும். பயிரை முழுவதுமாக தாக்கி அதன் சாற்றை உறிஞ்சுவதால் பயிரின் வீரியம் குறைந்து வளர்ச்சி குன்றி குட்டையாகக் காணப்படும். மேலும் தாக்குதல் தீவிரமாகும் போது பயிர் வாடி முற்றிலுமாக காய்ந்து போகும் நிலை ஏற்படும். இதனை கட்டுப்படுத்த *10* லிட்டர்தண்ணீருக்கு *60*மில்லி புங்கம் எண்ணெய், *60*மில்லி இலுப்பை எண்ணெய், *60*மில்லி வேப்பண்ணெய் உடன் *10*மில்லி ஒட்டும் பசை ( *10* கிராம் காதிசோப் ) சேர்த்து நன்கு கலந்து *12* நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும். இயற்கையான முறையில் விளக்குப் பொறிகளை பயன்படுத்தி பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். நிலத்தில் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் காய்கறி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

**தென்னை**

நிலவும் பருவச்சூழ்நிலையில் தென்னையில் சிவப்புக் கூண் வண்டு தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வண்டின் தாக்குதலால் மரத்தில் ஓட்டைகளும், ஓட்டைகள் வழியே திசுக்களைத் தின்ற பின் வெளியே தள்ளப்பட்ட மரநார்களும் காணப்படும். புழுக்கள் உட்சென்ற சிறிய துவாரத்தின் வழியே சிவப்புநீர் வடிந்து காய்ந்த பிசின் காணப்படும். மரத்தின் தண்டுப் பகுதியில் கூர்ந்து கவனிதத்தால், புழுக்கள் இரையும் சத்தம் கேட்கும். தாக்குதல் அதிகரிக்கும் நிலையில் மரத்தின் உட்புற ஓலைகள் மஞ்சள் நிறமாக மாறுகின்றன. அத்துடன் கொண்டைப் பகுதி முறிந்து விடுவதால் மரமானது பட்டுவிடும். இதனைக் கட்டுப்படுத்த ஒரு எக்டேருக்கு *1* பெரமோன் பொறி வீதம் வைக்க வேண்டும். *(*அதாவது *5* லிட்டர் வாளி ஒன்றில் *3* லிட்டர் தண்ணீர், *2* கிலோ ஆமணக்கு பிண்ணாக்கு, *2* அழுகிய வாழைப்பழம், *2* அன்னாசிப் பழ துண்டு மற்றும் *100* கிராம் சர்க்கரை சேர்த்து*)* வைக்க வேண்டும். அல்லது ஒரு மரத்திற்கு *100* மில்லி தண்ணீருக்கு *10*மில்லி என்ற அளவில் புரோபன்னோபாஸ் மருந்தினை கலந்து வேர் வழியாக கொடுக்க வேண்டும்.

**வாழை**

எதிர்பார்க்கப்படும் லேசான மழையை பயன்படுத்தி வளரும் பருவத்தில் உள்ள வாழைக்கன்றுகள், நடவு செய்து *5* மாதம் முடிவடையும் தருவாயில் உள்ள செடி ஒவ்வொன்றிற்கும் தலா *20* கிராம் என்ற அளவில் அசோஸ்பைரில்லம் + பாஸ்போபாக்டீரியா ஆகிய இயற்கை இடுபொருட்களை கலந்து இடவேண்டும். நிலத்தில் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் காய்கறி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

**தக்காளி**

தக்காளி பயிரில் புள்ளி வாடல் நோய் தாக்குதல் பரவலாக தென்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் தாக்குதலால் இலைகள், தண்டு மற்றும் பழங்களில் கோடுகள் காணப்படும். சிறிய கருப்பு வட்ட புள்ளிகள் இளம் இலைகளில் தோன்றும். இலைகள் அடர் பழுப்பு நிறமாக மாறும். பழங்களில் அரை அங்குல விட்டம் அளவிற்கு பல புள்ளிகள் காணப்படும். பழுத்த பழங்களின் கழுத்துப் பகுதியில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறமாக காணப்படும். புள்ளி வாடல் வைரஸ் நோயானது செடிப்பேன் மூலம் பரவுகின்றது. பாதிக்கப்பட்ட செடிகளை நீக்கி அழித்துவிட வேண்டும். வேலிப் பயிர்களை வளர்க்க வேண்டும். மேலும் 5மில்லி இமிடாகுளோப்ரைடு அல்லது ஊடுருவும் பூச்சிக் கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை தேவையான அளவு தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**கத்தரி**

கத்திரி பயிரில் சிற்றிலை நோய் தாக்குதல் பரவலாக தென்படக்கூடும். இவற்றின் தாக்குதலால் கத்தரிச் செடியின் இலைகள் சிறுத்தும்இ இலைக் காம்புகள் நீளம் குறைந்தும் காணப்படும். அளவுக்கு அதிகமான இலைகள்இ செடியின் நுனிக் குருத்தில் தோன்றி வளர்ச்சிக் குன்றிய செடியாக தோற்றமளிக்கும். மலர்கள் இலை போன்ற அமைப்பாக மாறிவிடும், காய்கள் காய்ப்பது அரிதாகிவிடும். நோய் தாக்கப்பட்ட செடிகளைப் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். இதனை கட்டுப்படுத்த *10* லிட்டர் தண்ணீருக்கு *6* மில்லி என்ற அளவில் இமிடாக்ளோபிரைடு உடன் *10*மில்லி ஒட்டும் பசை கலந்து இலை வழித் தெளிப்பாக தெளிக்க வேண்டும். நிலத்தில் மண்ணின் ஈரப்பதத்தின் அடிப்படையில் காய்கறி பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யவும்.

**முருங்கை**

தற்போதைய வளர்ச்சி நிலையில் செடி முருங்கையில் களைக் கட்டுப்பாடு மற்றும் பின் செய் நேர்த்தி முறைகளை கடைப்பிடிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். அதாவது விதைத்து இரண்டு மாதங்கள் வரை நிலத்தை களையின்றி பராமரிக்க வேண்டும் .பின் செடிகள் மூன்றடி உயரம் வளர்ந்த பிறகு மாதம் ஒரு முறை அல்லது தேவைப்படும் போது களையெடுக்க வேண்டும். மேலும் செடிகள் சுமார் 1 முதல் 2 மீட்டர் உயரம் வளர்ந்தவுடன் நுனியைக் கிள்ளிவிட வேண்டும். இவ்வாறு செய்வதனால் பக்கக்கிளைகள் அதிகமாகத் தோன்றி பூக்கள் மற்றும் காய்ப்பு அதிகரிக்கும். செடியின் உயரமும் குறைந்து அறுவடைக்கு வசதியாக இருக்கும்.

**பருத்தி**

தற்போதைய நிலையில் பருத்தியில் ஊட்டச்சத்துக் குறைபாடுகள் பரவலாக தென்படலாம். துத்தநாகக் குறைபாடு உள்ள நிலங்களுக்கு எக்டருக்கு *50* கிலோ துத்தநாக சல்பேட் இட வேண்டும். பயிர் வளர்ச்சியின் போது குறைபாடு தென்பட்டால் *0.5* சத துத்தநாக சல்பேட் கரைசலை விதைத்த *45*, *60* மற்றும் *75* நாட்களில் தெளிக்க வேண்டும். மக்னீசியம் குறைபாடு உள்ள நிலங்களுக்கு எக்டருக்கு *20* கிலோ மக்னீசியம் சல்பேட் இட வேண்டும். அடிப்படை இலைவழித் தெளிப்பாக *2* சத மெக்னீசியம் சல்பேட் தெளிக்க வேண்டும். பருத்தி காய் உருவாகும் பருவத்தில் *1* சத யூரியாவும் தெளிக்க வேண்டும்.

**மல்லிகை**

மல்லிகைப் பூப்பயிரில் மொட்டுப் பேன் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. தாக்குதலின் ஆரம்பநிலையில் பாதிக்கப்பட்ட மொட்டானது மஞ்சள் கலந்த சாம்பல் நிறத்தில் காணப்படும். மொட்டுக்கள் பெரிதாகாமல், சிறுத்து, காபி நிறத்தில் மாறி பின் காய்ந்து விடும். இதனைக் கட்டுப்படுத்த 10லிட்டர் தண்ணீருக்கு 30 மில்லி என்ற அளவில் புரோபன்னோபாஸ் மற்றும் 20 கிராம் கார்டாப் ஹைட்ரோகுளோரைடு உடன் 10 மில்லி ஒட்டுப்பசை சேர்த்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**உரம் வைத்தல் மற்றும் மருந்து தெளிக்கும் வேலைகளை** மழை இல்லாத நாட்களில் மேற்கொள்ளவும்.

**கால்நடை**

சமீப நாட்களில் ஆங்காங்கே கோடை மழை பெய்துள்ள நிலையில் வைக்கோல் மற்றும் மக்காச்சோள தட்டை போன்ற தீவன பொருட்களில் பூஞ்சாணத் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. வைக்கோல் மற்றும் சோளத் தட்டைகளை வெயிலில் நன்கு உலரத்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் போன்ற நச்சு பூஞ்சாணங்களின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளை பாதுகாக்கலாம்.

***4. மலைப்பிரதேசமண்டலம்***

*மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் இருக்கும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசானது முதல் மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 21-24°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09-12°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50-70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 02-04 கி.மீ அளவுக்கு தென்மேற்கு திசையில் வீ சக்கூடும்.*

***வேளாண் அறிவுரை***

- கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் இட வேண்டும்.
- பூண்டு-ஊட்டச்சத்து மற்றும் நோய் மேலாண்மை • பூண்டு விளைச்சலை அதிகரிக்க நடவு செய்த 30, 45 மற்றும் 60 நாட்களில் நீரில் கரையக் கூடிய நுண்ணூட்டச் சத்து கலவையை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 0.50 கிராம் என்ற அளவில் இடலாம். • பூண்டு பயிரில் இலைப்புள்ளி / ஊதா நிற கருகல் நோய் ஏற்படுவதை நிர்வகிக்க, மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைடு @ 2.5 கிராம்/லி என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- காய்கறி பயிர்களை தாக்கும் நச்சுயிரி நோய்களுக்கான ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகள் (மேரக்காய், பாகற்காய், மிளகாய், பீன்ஸ்) • நோயற்ற விதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும் • ஒரே பயிரை திரும்ப திரும்ப பயிரிடக் கூடாது • நச்சுயிரி தாக்கப்பட்ட செடிகளை சேகரித்து, அழிக்க வேண்டும் • நாற்றங்கால் படுக்கைகளின் மீது நைலான்வலை (அ) வைக்கோல் கொண்டு மூட வேண்டும் • மிளகாய் போன்ற காய்கறி பயிர்களை பயிரிடும் போது, 2-3 வரிசை மக்காச்சோளம் (அ) சோளத்தை வரப்பு பயிராக பயிரிட வேண்டும் • ஒட்டுப் பொறிகளை (நீலம்&மஞ்சள், முறையே) ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் வயலில் பொருத்தவும் • தேவையெனில், டைமெத்தோயேட் @ 2.0 மிலி/லிட்டர் (அ) தையாமீதக்ஸம் @ 0.2 மிலி/லிட்டர் (அ) இமிடாக்ளோப்ரிட் @ 0.2 மிலி/லிட்டர் என்ற அளவில்கைத் தெளிப்பான் கொண்டு மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- கால்நடைகள்: i) மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழையிலிருந்து உங்கள் விலங்குகளைப் பாதுகாக்கவும். ii) விலங்குகளை வெளியில் மேய்க்க அனுமதிக்காதீர்கள். iii) மின் கம்பங்கள் மற்றும் மரங்களுக்கு அடியில் கால் நடைகளை கட்ட வேண்டாம். iv)

உள்ளூர் கால் நடை மருத்துவருடன் கலந்தாலோசித்து, உங்கள் கால்நடைகளுக்கு பருவ கால நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடுங்கள்.

## 5. வட மேற்கு மண்டலம்

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்பட்டு மாவட்டத்தின் சில இடங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.* அதிகபட்ச வெப்பநிலை *36 - 37*°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை *24- 27*°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் *70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10-14 கி.மீ* அளவுக்கு தென்மேற்கு திசையிலிருந்து *வீசக்கூடும்.*

### வேளாண் அறிவுரை

- கத்தரியில் தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலையில் **காய்ப்புழு தாக்குதல்** தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த, பாதிக்கப்பட்ட செடிகளை நுனியை கிள்ளி விட வேண்டும். இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு *5* வீதம் வைத்து தாய் ஆண் அந்துபூச்சிகளை கவர்ந்து கண்காணிக்க வேண்டும். பொருளாதார சேத நிலை தாண்டும் போது வேப்பங்கொட்டை *(5 சதவீதம்)* கரைசல் தெளிக்க வேண்டும் அல்லது ஸ்பைனோடிரன் ஒரு லிட்டர் தண்ணீருக்கு *1* மில்லி என்ற அளவில் கலந்து தெளித்து காய்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- பருத்தி பயிரில் தற்போது நிலவி வரும் தட்பவெப்பசூழ்நிலையில் *50 – 70* நாள் வயதுடைய **சாறு உஞ்சும் பூச்சிகளின் தாக்கம்** தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த, இலைவழி தெளிப்பாக தையோமீத்தாக்சாம் *25*WG *2* கிராம் / *10* லிட்டர் தண்ணீருக்கு அல்லது இமிடாகுளோபிரிட் *17.8* SL *3* மில்லி / *10* லிட்டர் தண்ணீருக்கு கலந்து தெளிக்கவும்.

### கால்நடை ஆலோசனைகள்

- தற்போது கோடை மழை பெய்ய வாய்ப்புள்ளதால் மழை நீர் வீணாகாமல் நிலத்தடியை சென்றடைய **வரப்பை உயர்த்தி அமைக்க வேண்டும்.** அதே சமயம் அடிமண் இருக்கத்தை சரி செய்ய **உளிகளப்பை** கொண்டு *0.5* மீட்டர் ஆழத்திற்கு *0.5* மீட்டர் அகலத்திற்கு குறுக்கும் நெடுக்குமாக உழவு மேற்கொள்ள வேண்டும்.
- தர்பூசணி சாகுபடி செய்துள்ள பகுதியில் தற்போது நிலவி வரும் தட்பவெப்ப சூழ்நிலை காரணமாக **இலைப்பேண்** தாக்குதலினால் சேதம் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த **ஊதா வர்ண ஒட்டும் பொறி** ஒரு ஏக்கருக்கு *5* வீதமும்இ இலை வழி தெளிப்பானாக **வேப்ப எண்ணெய்** ஒரு லிட்டருக்கு *3* மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும். இதை தொடர்ந்து பொருளாதார சேத நிலை தாண்டும் போது **தையோமித்தாக்சம்** என்ற பூச்சிக்கொல்லியை ஒரு லிட்டருக்கு *2* கிராம் வீதம் கலந்து ஒரு ஏக்கருக்கு *200* லிட்டர் தண்ணீரில் தெளிக்க வேண்டும்.
- நிலவும் வானிலையில் கோழிகளுக்கு **வெள்ளைக் கழிச்சல் நோய்** ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நோயின் அறிகுறிகள் கோழிகள் தலையை ஒரு பக்கமாக சாய்ந்து கொள்ளுதல்இ கழிச்சல் மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு ஏற்படும். பொதுவாக நாட்டு கோழி வளர்ப்பு விவசாயிகள் வெள்ளை கழிச்சல் நோய்க்கு எதிராக கோழிகளுக்கு தடுப்பூசி அளிக்க வேண்டும். அதாவது *7*வது நாள் *ஔ1*

தடுப்பூசி (கண்ணில் சொட்டு மருந்தாக) 28வது நாள் லசோட்டா (கண்ணில் சொட்டு மருந்தாக) 56வது நாள் ஆர்டிவிகே தடுப்பூசி (இறக்கையில்) போடவேண்டும். மேலும் வெள்ளைக்கழிச்சல் நோய் நாட்டுக் கோழிகளுக்கு வராமல் தடுக்க தடுப்பூசியுடன் கோழிகளுக்கு கீழ்கண்ட மூலிகை மருத்துவ முறைகளையும் பயன்படுத்தலாம்.

- ***10* கோழிகளுக்கு தேவையான மூலிகை மருத்துவம்**

  சீரகம் - *10* கிராம்
  மிளகு - *5* கிராம்
  மஞ்சள் பொடி - *5* கிராம்
  சின்ன வெங்காயம் - *5* எண்ணிக்கை
  பூண்டு - *5* பல்
  கீழாநெல்லி - *50* கிராம்

**சிகிச்சை முறை**

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்து மூலிகை மருந்துகளையும் இடித்து அரைத்து அதை சிறு சிறு உருண்டைகளாக மாற்ற வேண்டும். இக்கலவையை தீவனம் அல்லது அரிசி குருணையில் கலந்து கொடுக்கலாம். மிகவும் பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு சிறு சிறு உருண்டைகளாக வாய்வழியாக உட்செலுத்த வேண்டும்.

***6. வடகிழக்கு மண்டலம்***

*வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வானம் தெளிவாக காணப்படும். பகல்நேர வெப்பநிலை **35**°செ முதல் **38**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **28**°செ முதல் **30**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் **60-70** சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் **30** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் **12-20** கி.மீ ஆகவும் பெரும்பாலும் காற்று தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

***வேளாண் அறிவுரைகள்***

- *தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷம் 25% WG **100** கிராம் / எக்டர் அல்லது டைமீத்யோட் **1.5** மி.லி / லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் **400** மி.லி/ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு **600** கி/ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.*
- *அறுவடைக்கு தயாராக உள்ள நெற்கதிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும்.*
- *நெல் நாற்று வயலில் மண் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தவும், தரமான நாற்றுகள் வளர்வதற்கும் அசோஸ்பைரில்லம் **2.5** கிலோவை **25** கிலோ மணல் / மண்ணுடன் கலந்து இட வேண்டும்.*
- *கரும்பு பயிரில் மாவுப்பூச்சி மற்றும் பொக்கா போங்க் தாக்கம் காணப்படுகிறது. இதனால் பயிர்களின் வளர்ச்சி குன்றி மற்றும் குருத்து காய்ந்து காணப்படும். இதனை கட்டுப்படுத்த இமிடாக்ளோப்ரிட்17.8 SL **0.6** மிலி/லி அல்லது கார்பென்டாசிம் **1.0** கி/லி என்ற அளவில் தெளிக்கலாம். கரும்பிற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த*

TNAU கரும்பு பூஸ்டரை கரும்பு நட்ட 45,60 மற்றும் 75 வது நாட்களில் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ 1.5 கிலோ மற்றும் 2 கிலோ வீதம் முறையே 200 லிட்டர் தண்ணீரில் தேவையான ஒட்டும் திரவம் கலந்து தெளிக்க வேண்டும்.

- பசை தடவிய மஞ்சள் நிறப்பாலித்தீன் தாள்களை மரத்தை சுற்றிகட்டி முதிர்ந்த ஈக்களை கவர்ந்து அழிக்கலாம். வெள்ளை ஈக்கள் அதிகளவு பரவும் போது என்கார்ஸியா ஒட்டுண்ணிகள், காக்ஸினெல்லிட் ஒட்டுண்ணிகள் / பொறிவண்டுகள் மற்றும் கிரைசோபெர்லா இரைவிழுங்கிகள் ஆகிய நன்மை செய்யும் பூச்சிகள் தோப்புகளில் இயற்கையாகவே உருவாக ஆரம்பிக்கும். என்கார்ஸியா ஒட்டுண்ணிகள் அதிக அளவு உருவாகி வெள்ளை ஈக்களின் சேதத்தை 40 முதல் 70% அளவுக்கு குறைக்கின்றது. அதிக பாதிப்பின் போது ஒரு லிட்டர் நீருக்கு வேப்பெண்ணெய் 20 மிலி அல்லது அசாடிராக்டின் 1.0% EC 2.0 மிலி/லிட்டர் தண்ணீரில் மருந்தை ஒரு லிட்டருக்கு 1.0 மி/லி ஒட்டும் திரவத்துடன் கலந்து தென்னை ஓலையின் அடிப்புறம் தெளிக்கவும்.
- வாழையில் வாடல் நோயை கட்டுப்படுத்த பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் ட்ரைக்கோடெர்மா விரிடி 2.5 கிலோ / எக்டர் இட வேண்டும் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் 5 மி.லி / லிட்டர் ஊற்ற வேண்டும். வாழையில் நுண்ணூட்ட சத்துக்களின் குறைபாட்டை நிவர்த்தி செய்ய மற்றும் பழத்தின் தரத்தை உயர்த்த, வாழை நட்ட 3,5 மற்றும் 7 மாதங்களில் நுண்ணூட்ட கரைசலை இலைமீது தெளிக்கவும்.

**கால்நடை ஆலோசனைகள்**

- இந்த நாட்களில் அதிக வெப்பமான நேரங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதை தவிர்க்கவும்.
- செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருந்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை கொடுக்க வேண்டும்.
- அதிக பால் கொடுக்கும் கலப்பின கறவை மாடுகளில் மூன்று வேளை தீவனம் கொடுப்பதற்கு பதிலாக நான்கு வேளையாக பிரித்து கொடுக்கும் போது அதிக அளவு பால் உற்பத்தி கிடைப்பதோடு அல்லாமல் வெப்ப அயர்ச்சிக்கு உள்ளாகாமலும் இருக்கும்.
- வெப்ப அயர்ச்சியால் எருமைகளில் வெயில்கால மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே வெப்பத்தை குறைக்க கொட்டகையில் நல்ல காற்றோட்ட வசதி செய்து தர வேண்டும்.
- வெண்பன்றிகளில் வெயில் காலங்களில் கொழுப்புச்சத்து அதிகம் உள்ள தீவனம் அதாவது பன்றிகளுக்கு இடும் உணவு கழிவுகளால் சில சமயங்களில் ஜீரண கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மாலை அல்லது இரவு நேரங்களில் கொழுப்புச்சத்து அதிகமுள்ள தீவனங்களை கொடுப்பது நல்லது.
- ஆஸ்பெஸ்டாஸ் அல்லது மெட்டல் கூரையுள்ள முயல் கொட்டகைகளில் கோடைகாலங்களில் கூரையின் மேல் தென்னங்கீற்றை அடுக்கி வைத்து அதன் மேல் தண்ணீர் பாய்ச்சும் போது கொட்டகையின் உட்புற வெப்பநிலை குறையும்.
- கோடை காலத்தில் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு குளிர்ந்த, ஆரோக்கியமான குடிநீரை வழங்குவது அவசியம்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

07.05.25, 08.05.25, 10.05.25 மற்றும் 11.05.25 ஆகிய தினங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது அதிகபட்ச வெப்ப நிலை 34 - 35$^0$ செ ஆகவும், குறைந்த பட்ச வெப்ப நிலை 26 - 27 $^0$செ ஆகவும், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர அதிகபட்ச வெப்பநிலை 80 - 90 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர அதிகபட்ச வெப்பநிலை 50 - 60 % பதிவாக வாய்ப்புள்ளது. குாற்றின் வேகம் மணிக்கு 16 – 22 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரைகள்**

- **வாழையில் நூற்புழு மேலாண்மை :** வாழைக் கன்றுகளின் வேர் மற்றும் அழுகிய பகுதிகளை சீவி நீக்கி விட்டு மண் கரைசலில் நனைத்து அதன் மீது 40 கிராம் கார்போபியூரான் 3 ஜி குருணை மருந்தினை தூவி பின் நடவு செய்யவும்.
- வாழைக்கு நீர்பாய்ச்சுதல் மற்றும் மூடாக்கு செய்து ஈரப்பதத்தை தக்கவைக்கலாம். அதோடு 7 மாதமான வாழை மரங்கள் காற்றினால் சேதம் ஏற்படாமல் இருக்க மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்கவும்.
- மிளகு கொடிகளுக்கு வட்ட பாத்திகள் அமைத்து அவற்றில் வேர் உட்பூசண உரம் மற்றும் மண் புழு உரங்களை இட்டு அதன் மேல் காய்ந்த இலைகளை கொண்டு மூடாக்கு அமைத்து உடனடியாக அதிக நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். இதன் மூலம் மகசூலை அதிகரிக்க செய்யலாம். (மார்ச் மாதத்தில் ஒரு முறையும் மறுபடியும் ஏப்ரல் மாதத்தில் ஒரு முறையும்)
- கோ-கோவில் தேவைக்கேற்ப பாத்திகளில் களை எடுத்தல், மண் அணைத்தல் மற்றும் மூடாக்கு இடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும்.
- தென்னையில் ஒவ்வொரு அறுவடைக்குப்பிறகும் நுனி வளைந்த கம்பி மூலம் காண்டாமிருக வண்டினை சேகரித்து அளிக்கலாம். ஒரு மரத்திற்கு மூன்று நாப்தலீன் உருண்டையுடன் 100 கிராம் மணல் கலந்து மரத்தின் கொண்டைப் பகுதியில் வைத்துக் கட்டுப்படுத்தலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.வே.ப.க. கோவை**